பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

UTHAYAN

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஹூ ஐப்பசி மீ 11 உ ஞாயிற்றுக்கிழமை (28 - 10 - 1990) ஹிஜ்ரி 1410 ற. ஆகிர் 08 கதிர்: 235

# 11 எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கு கொலை மிரட்டல்

## சர்வதேச மன்னிப்புச் சபை தகவல்

ஜெனிவா, அக். 28

ஸ்ரீலங்காவில், தென்னிலங்கையைச் சேர்ந்த பதினொரு எம். பிக்களுக்குக் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாம்.

அவர்களில் ஐவர் தமக்குக் கிடைத்த கொலைப் பயமுறுத்தல் குறித்து சர்வதேச நாடாளுமன்ற சங்கத்திடம் முறைப்பாடு செய்திருக்கிறார்கள்.

இந்தத் தகவல்களை சர்வதேச மன்னிப்புச் சபை தான் வெளியிட்ட பிந்திய அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரஸ்தாப அறிக்கையில், தென்னிலங்கையில், 1990 பெப்ரவரியின் பின்னரும் மனித உரிமை மீறல்கள் பெருமளவில் நடைபெற்று வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசாங்கப் படைகள், அரச சார்பான ஆயுதக் குழுக்கள் தமது விசாரணை இல்லாத மரண தண்டனைகளைத் தாராளமாக நடைமுறைப்படுத்தி வருகின்றன—

தியாகம, பண்டாரகம, எம்பிலிப்பிட்டிய, சூரியவெவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஊர்காவலரின் சூட்டுக்குப் பலி

யாழ்ப்பாணம், அக். 28

ஓமந்தைக் காட்டுக்கு வேட்டையாடச் சென்றவர் வழி தவறி மாமடு சென்ற போது அங்கு வைத்து ஊர் காவலரினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இளமருதங்குளம் பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை அன்ரனி என்ற நபரே கடந்த 23ஆம் திகதி இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டார். [உ]

### புதிய இராணுவ முகாம்

யாழ்ப்பாணம், அக். 28

அம்பாறை மாவட்டம் காஞ்சிரம்குடா பகுதியில் இராணுவத்தினர் புதிய படைமுகாம் ஒன்றை அமைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

### 'லங்காசிறி' புறப்பட்டது

யாழ்ப்பாணம், அக் 28

ஆயிரத்து 700 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களுடன் 'லங்காசிறி' என்ற கப்பல் நேற்று கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டது.

விசர்நாய்க்கடி தடுப்பு ஊசி மருந்தும் இந்தக் கப்பலில் கொண்டு வரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-5]

### அரச அதிபருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், அக். 28

குடாநாட்டின் தற்போதைய நிலைமையை நேரில் கண்டறிய வந்துள்ள நோர்வே, பிரிட்டிஷ் தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள் மூவரும் நேற்றுயாழ். அரச அதிபரைச் சந்தித்தனர்.

யாழ். மாவட்டத்தின் பிரச்சினைகள், அவசரத் தேவைகள், மக்கள் படும் துன்பங்கள் குறித்து அரச அதிபர் அவர்களுக்கு விளக்கமாக எடுத்துக் கூறினார் (ஒ 6)

## யாழ். நகரப் பகுதியில் நேற்று மீண்டும் பொம்மர் தாக்குதல்

### இருவர் காயம், 3 வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், அக். 28

யாழ். நகரப் பகுதியில் நேற்று மீண்டும் பொம்மர்த் தாக்குதல்கள் இடம்பெற்றன.

நேற்றுக்காலை 8 40 மணி அளவில் வந்த 3 பொம்மர்கள் நகரப் பகுதியைச் சுற்றி வட்டமிட்டுவிட்டு திடீரெனக் குண்டுகளை வீசின.

யாழ். பெரிய கோயிலுக்கு அண்மையிலுள்ள மக்கள் நெருக்கமாக வசிக்கும் கதிற்றல் வீதி, டேவிற் வீதிகளில் குண்டுகள் வீசப்பட்டன

யாழ் கோட்டைப் பகுதியிலும் இரண்டு குண்டுகள் வீசப்பட்டன.

கதிற்றல் வீதி-டேவிற் வீதிச் சந்திக்கு அருகில் விழுந்த குண்டுகள் பொதுமக்கள் குடியிருப்புகள் மீது வீழ்ந்து வெடித்தன. இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் காய

(4 ஆம் பக்கம் பார்க்க)

### நேற்றைய குண்டு வீச்சால் நகர மக்கள் சஞ்சலம்

யாழ்ப்பாணம், அக். 28

யாழ் நகரில் குடிமக்கள் வாழும் பகுதியில் நேற்று இடம்பெற்ற பொம்மர் தாக்குதலால் நகர மக்கள் மத்தியில் ஒரு வித சஞ்சலம் ஏற்பட்டுள்ளது.

நகரில் பெரும்பாலான மக்கள் இடம் பெயர்ந்திருந்து சமீபத்தில்தான் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பி இருந்தனர்.

தற்போதைய மழையினால் பெரும்பாலான வீடுகளில் பதுங்கு குழிகளும் பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதம் அடைந்துள்ளன. (இ)

### மாவிட்டபுரம் பகுதியில் இரவிரவாக கடும் சண்டை

மாவிட்டபுரம் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் (வெள்ளி) இரவு ஆரம்பமான கடும் சண்டை நேற்றுக்காலை வரை நீடித்தது.

இராணுவத்தினர் இரவிரவாகக் கடும் ஷெல் தாக்குதல்களையும் நடத்தினர்.

நேற்றும் இப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும், இடையிடையே ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன (ஒ-5)

### அரண்கள் அமைப்பதில் காங்கேசன் படை மும்முரம்

யாழ்ப்பாணம், அக். 28

காங்கேசன்துறைப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று அப்பகுதியில் காவல் அரண்களை அமைப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

கீரிமலை, பருத்தித்துறை வீதியில் உள்ள கிருஷ்ணன் கோவில் வரையான இடங்களில் இராணுவத்தினர் பல மண் காவல் அரண்களை அமைத்து வருகின்றனர்.

இதேவேளை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதிப் பக்கமாக அமைந்துள்ள சீமெந்து தொழிற்சாலை ஊழியர் நலன்புரிச்சங்க மண்டபத்திற்கு அருகிலும் அரண் அமைக்க படையினர் முயற்சி செய்து வருகின்றனர். [ஒ 5 3]

### வீடு பார்க்க சென்றோர் திரும்பவில்லை

தெல்லிப்பழை, அக் 28

வறுத்தலைவிளானில் உள்ள தமது வீட்டைப் பார்த்துவர கடந்த திங்கட்கிழமை காலையில் சென்ற இருவர் நேற்றுவரை திரும்பி வரவில்லை.

கந்தையா பொன்னம்பலம் [வயது 65] அவரது மகளான இரண்டு குழந்தைகளின் தாயான குகதாஸன் சிவமலர் [வயது 38] ஆகியோரே அந்த இருவருமாவர். [ஒ-5 3]

### சுவாமி சின்மயானந்தா கைது!

புதுடில்லி அக். 28

நேற்று அயோத்தி நகரில் விஷ்வஹிந்து பரிஷத் தலைவர்கள் பலரும் சுவாமி சின்மயானந்தாவும் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். (ஒ எ)

### ஆபாசத்துக்கு மரண தண்டனை

பீகிங், அக். 28

சீனாவில் ஆபாசப் புத்தகங்கள் மற்றும் ஒலிப்போ வீடியோ கஸெட்டுகள் வைத்திருப்பவர்களுக்கு இனிமேல் மரண தண்டனை [illegible] அறிவித்திருக்கிறது. (ஒ 3)

### யாழ். வங்கிகளுக்கு பணம் அடுத்த வாரத்தில் வரும்?

யாழ். மாவட்ட இலங்கை வங்கி, மக்கள் வங்கிக் கிளைகளுக்குத் தேவையான பணத்தில் ஒரு பகுதி அடுத்த மாதம் முதல் வாரமளவில் வர இருக்கும் கப்பல்களில் கொண்டுவரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

பிரஸ்தாப வங்கிகள் தங்கள் தலைமையகங்களுக்கு பணத்தேவை குறித்து ஏற்கனவே விரிவாக எடுத்துக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

எனினும் இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பவற்றுக்கு தலா 50லட்சம் ரூபா மட்டுமே இம்முறை அனுப்பப்படலாம் எனத் தெரியவருகிறது (ஒ 6)

### உயரதிகாரிகளுடன் பேச யாழ். அரசாங்க அதிபர் கொழும்பு செல்கிறார்

யாழ்ப்பாணம், அக், 28

யாழ். மாவட்டத்தின் முக்கிய தேவைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து உயரதிகாரிகளுடன் பேசுவதற்காக யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இன்னும் ஓரிரு தினங்களில் கொழும்பு செல்வார்.

ஓய்வூதியர்களின் பிரச்சினை, பணப் புழக்கத்தைச் சீராக்க பணத்தை வடக்கிற்குத் தருவித்தல், டிரான்ஸ்போமர் ஒயில் பெறுதல், உலர் உணவு மற்றும் நிவாரண விநியோகம், மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயங்கள் குறித்து அவர் கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ 6]

### வயோதிபர்களை கடலில் பரிதவிக்க விட்ட படையினர்!

#### 3 இளைஞரின் கதி தெரியவில்லை

தென்மராட்சி, அக் 28

படகில் வந்த வயோதிபர்கள் சிலரை கடலில் இறக்கி விட்டு கரைக்குச் செல்லுமாறு கடற்படையினர் பணித்தனர்.

மார்பளவு தண்ணீரில் இறக்கி விடப்பட்ட அவர்கள் பெரும் கஷ்டத்தின் மத்தியில் கரையை அடைந்தனர்,

அண்மையில் விடத்தல்தீவு கடல் பகுதியில் நடந்த இந்த சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:-

இந்தியாவில் தமது குடும்பத்தினரை முகாமில் தங்க வைத்துவிட்டு பத்துப்பேர் படகில் திரும்பிக் கொண்டிருந்தனர்

விடத்தல்தீவு கடற்பகுதியில் கடற்படையினரால் மறிக்கப்பட்டது. படகில் வந்த வயது முதிர்ந்த ஏழு பேரை படையினர் கடலில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

### விற்பனைக்கு

9X9 ஸ்ரீல் சுருக்கு கடைக் கேற்சுளும், வீட்டுச் சுதவு கள், யன்னல்களும் விற் பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 7, கைலாசபிள்ளையார் கோவில் பின்வீதி, நல்லூர். (14572)

### வைத்தியசாலை இடமாற்றம்

தெல்லிப்பளையில் இயங்கி வந்த பிரபல ஆஸ்மா வைத்தியர் டாக்டர் மா நட ராஜாவின் வைத்தியசாலை இழ்க்காணும் முகவரியில் இயங்குகிறது மே/பா, எஸ். நவரட்ணம், 84/1, கொழும்புத்துறை மேற்கு, கொழும்புத்துறை. (சணக்கர் சந்திக்கு அருகாமையில்) (14576)

### விற்பனைக்கு

உருத்ர வீ லவ தபேலா மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனைக் குண்டு. விலாசம்: இல. 07, முதலியார் லேன், கண்டிக் குளி சனசுருத்தினம் மகா வித்தியாலயத்திற்கு அண்மையில்) (14580)

### சேவை

தெளிவான போட்டோ கொப்பி, றோனியோ தட்டச்சு, வேலைகளுக்கு காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை சண்முகம் ரேட்ஸ் இல. 65 (185) பிரதான வீதி, யாழ்ப்பாணம். (14556)

### வாங்கலாம், விற்கலாம்

தினமும் திறந்திருக்கும் பழைய புத்தகங்கள் வாங்கப் படும், விற்கப்படும் Senathi-rajah, Second Hand Book House, 13/6, ஸ்ரான்லி றோட், இலங்கை வங்கி முன் லேன், யாழ்ப்பாணம். (14577)

### ''பூம்பனிமலர்கள்''

மீரா வெளியீடு ''அலுவல கங்களுக்கு பெண்கள் உத்தி யோகம் பார்த்து வருகின்ற னர். ஆண்கள் எப்படி அவர் களை அவர்களது உணர்வு களை மதிக்கிறார்கள்?'' உதவி அரசாங்க அதி பர் து. வைத்திலிங்கம் எழு தியது ஜர்க்கா ஸ்ரோ ஸேர்ஸ், சுன்னாகம்; பிரெண்ஸ் (B), கிளிநொச்சி. ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர் (14558)

### கறுப்பு வெள்ளை படம்

12 X 10 கறுப்பு வெள்ளை படம் பெருப்பித்து கொடுக் கப்படும் சித்திர கலா போட்டோ இறாடஸ், நம்3, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். (14566)

### கிளின் கட் போட்டோஸ்ரற்

தெளிவான போட்டோ ஸ்ரற் பிரதிகளை உடனடி யாகப் பெற்றுக் கொள்ள வும். அடையாள அட்டை கட்டு கவரிட்டு கொள்ளவும் கிளின் கட் 37 சிவகுருநாதர் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப் பாணம் யாழ். இந்து மகளிர் சந்திக்கு அண்மையில் (14523)

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற் றும் தமிழ், ஆங்கிலம் ரைப் பிங் வேலைக்கும் Fudo Enterprises, பிரதான வீதி, மானிப்பாய், Bank - Siva studio அருகாமையில். (சி-5219)

### ஆங்கிலம்

யூன் மாதத்தில் இருந்து இடை நிறுத்தப்பட்ட G. C. E (A/L) (O/L) ஆங் கில வகுப்புக்களும் ஏனைய ஆங்கில வகுப்புக்களும் இம் மாதம் 15 ஆம் திகதியில் இருந்து நடைபெறுகின்றன. புதிய பிரிவுகள் நவம்பர் 2-ஆம் திகதி ஆரம்பமாகும். வ. கோவிந்தபிள்ளை 62 பழம் றோட், கந்தர்மடம். (14574)

### S. M. V. Institute

மேற்குறிப்பிட்ட கல்வி நிலையம் 221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலா சத்திற்கு (பிறவுண்வீதி நாவ லர் வீதி சந்திக்கு அருகாமை யில்) இடமாற்றம் செய்யப் பட்டு வகுப்புகள் 29-10-90 திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளன. (14582)

---

# எமிலியானுஸ்பிள்ளை
## தொழில் நுட்ப நிறுவனம் - நாரந்தனை
### அகில உலக கெயர்

# மரவேலைப் பயிற்சி

அகில உலக கெயர் ஸ்தாபனத்தின் உதவி யுடன் மேற்படி இலவச பயிற்சி நெறிகள் 05 - 11 - 90 இல் மீண்டும் ஆரம்பமாகின்றன.

★ காலம் - 2½ மாதங்கள்

★ தகைமை - 15 வயதும் அதற்கு மேற்பட்டோரும் 8ஆம் வகுப்பும் அதற்கு மேற்பட் டோரும் தகுதி கண்டு குறைந்த தகைமையும் ஏற்கப்படும்.

ஒழுங்கான பயிலுனர்க்கு:-

1. நாளாந்த ஊக்குவிப்புப்படி ரூபா 30/-
2. பயிற்சி முடிவில் ரூபா 1000 பெறுமதியான இல வச உபகரணப் பொதி.
3. ஆரம்ப பயிற்சியின் பின் 10 மாதங்களுக்கு வேலைத்தலப் பயிற்சி - வேலைக்கேற்ற ஊதியம்.
4. பயிற்சி முடிவில்
   i) பரீட்சை, வேலை அடிப்படையில், தொழில் நுட்ப நிறுவன, தேசிய தரத்திலான (அர சாங்க) சர்வதேச தரத்திலான அகில உலக கெயர் தொழிற் சான்றிதழ்கள்.
   ii) சொந்தத்தில் தொழில் முயற்சி தொடங்க விரும்புவோருக்கு வழிவகைகள்

விண்ணப்பங்கள் கைமூலமோ அல்லது தபால் மூலமோ 04 - 11 - 90 முடிவுக்கு முன்னர் கிடைக்க் கூடியதாக புனித சூசையப்பர் சகோதரர் இல்லம் நாரந்தனை என்ற முகவரிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

- பணிப்பாளர்

(14565)

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான விண்ணப் தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1990-11-20 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**தற்காலிக உதவி விரிவுரையாளர் (கணக்கீட்டுப்பகுதி)**

**சம்பள அளவுத்திட்டம்:**

உதவி விரிவுரையாளர்: ரூபா 3 900/- மாதமொன்றுக்கு (நிலையானது)

இப் பல்கலைக்கழகத்தில் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்

தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் சுயமுகவரியிட்டுமுத்திரையொட்டப்பட்ட 23 10 ச.மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண் ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத் திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்த மான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
26 - 10 - 1990 (சி 5345)

---

# ★ பிறீமியர் பேக்கரி ★

பிரதான வீதியில் உள்ள எமது மேற்படி ஸ்தாபனம் மீண்டும் 29-10-90 இல் ஆரம்பிக்கப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

# பிறீமியர் பேக்கரி

73, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (14579)

---

# 3ஆம் ஆண்டு இதய அஞ்சலி

மலர்வு: 30 - 12 1930 — உதிர்வு: 28 - 10 - 1987

திரு.
## அ. செ. அந்தோனிப்பிள்ளை
(இளைப்பாறிய அரசாங்க எழுதுவினைஞர் வன இலாகா யாழ்ப்பாணம்)

இயேசு சொன்னது உயிர்த்தெழுதலும் ஜீவனும் நாமே என்னில் விசுவாசம் வைக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். யோ. 11:25

அன்பு மனைவி,
பிள்ளைகள். மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கண்டி றோட்,
கைதடி நுணாவில். (14265)

---

# மரண அறிவித்தல்கள்

## Dr. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் (R. M. P.)

மஞ்சத்தடி இணுவிலைச் சேர்ந்த Dr. வேலுப் பிள்ளை சுப்பிரமணியம் 21 - 10 - 90 இரவு 7 மணி அளவில் காலமாகிவிட்டார். அன்னார் மங்களேஸ் வரியின் அன்புக்கணவரும் றேகினி, சுதன் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும், கல்வி அமைச்சின் தமிழ் விதானப் பகுதியைச் சேர்ந்த வல்லிபுரம் மகேஸ் வரனின் (B.A.Hons) மாமனாரும், சிந்து, இருத்திகா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 22 10 - 90 நண்பகல் காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுப்பிரமணியம் மங்களேஸ்வரி
மஞ்சத்தடி, இணுவில். (14575)

## வன்னியசிங்கம் சிங்கமாப்பாணர் (சிங்கர்)
(Retired Audit Examiner)

வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொக்குவில் மேற்கு வாசியுமாகிய வன்னியசிங்கம் சிங்கமாப்பாணர் 27 - 10 - 90 ல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வன்னியசிங்கம் தம்பதி களின் அன்பு மகனும் திரு. திருமதி குமாரசுவாமி யின் அன்பு மருமகனும், தங்கரத்தினத்தின் அரு மைக் கணவரும், திருமதி ப. தயாளதேவியின் அன் புச் சகோதரரும். ராஜ்மோகன் (கனடா), சதீஸ் மோகன் (பொறியியல் மாணவர்-மொறட்டுவ வளா கம்), நிருபா (யாழ். பட்டப் படிப்புக் கல்லூரி). மதன்மோகன், றஞ்சித்மோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பரராஜசேகரம், பாலசுந்தரம் (சம்பு சிவம் அன்கோ), சண்முகநாதன் (யாழ் மேல் நீதிமன் றம்), தவசிங்கம் (இ. போ. ச. கோண்டாவில்), சிவ சுப்பிரமணியம் (கனடா). சிவஇன்பநாயகி ஆகியோ ரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27-10-90 சனிக் கிழமை கொக்குவிலில் நடைபெற்றது. இவ் அறிவித் தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சி. தங்கரத்தினம்.
கொக்குவில் மேற்கு. (14578)

# OBITUARY
## MR JAMES BARTON HUNT

Formerly of Irrigation Department
Expired on 27-10-90

Funeral at 3 p.m. on Sunday 28-10-90 at 9: Church Road, Chavakachcheri.

Eldest son of Late Mr & Mrs E. B. Hunt, Brother of T. P. Hunt and late Miss C. H. Hunt & Miss A. G. Hunt and Husband of Rageswary (Maniwilson) and Father of Menaka.

Friends and relations accept this intimation.

T. P. HUNT
50/1, Church Road,
Chavakachcheri. (14581)

---

# யாழ். நகரில் வியாபாரம்

யாழ் நகரில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது ஒருவாறு தப்பிய கடைகள் படிப்படியாக திறக் கப்பட்டு வருகின்றன.

நகரைவிட்டு இடம் பெயர்ந்து சென்ற மக்களும் தமது வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரி யார் வீதி, ஸ்ரான்லி வீதி கே. கே. எஸ் வீதிகளில் உள்ள கடைகள் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்று வருகிறது. (ஓ 6)

# 50 பேர் மரணம்

ஜெய்பூர், அக். 28

பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் அத்வானி கைதுசெய் யப்பட்டதைத் தொடர்ந்து, [illegible] நகர் ஜெய்பூரில் ஏற்பட்ட [illegible] தோரின் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்தது. (ஓ எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதயன்

### கோட்பாட்டை பொடியாக்க...

ஸ்ரீலங்கா அரசு தனது படைபலத்தை அதிகரிக்கிறது. ஜூனில் யுத்தம் தொடங்கிய பின்னர்தொண்டர்படை, நிரந்தர இராணுவம், உபபடைஎன்றுமேலதிகமாக ஐம்பதினாயிரம் பேர் திரட்டப்பட்டுள்ளனர். விமானப்படை புதிய விமானங்களை வாங்குகிறது. விமான ஓட்டிகள் புதிதாகச் சேர்க்கப்படுகிறார்கள். நவீன ஆயுதங்கள் வாங்கப்படுகின்றன. தொடர்ச்சியான ஒரு யுத்தத்துக்கு அரசு தயார் செய்துகொண்டிருக்கிறது என்பது மறைபொருள்.

நாட்டின் நிதிவளம் வற்றிச்செல்கிறது. வெளிநாட்டு முலவளம் குன்றிவிட்டது. தேயிலை, தெங்கு உற்பத்தி வீழ்ச்சியால் ஏற்றுமதி வருமானம் தேய்ந்து போயிற்று. கஜானா வெற்றாகாமல் தடுக்க மத்திய கிழக்கின் செலாவணியும் செத்துப் போகும் ஆபத்து வந்திருக்கிறது.

இத்தனை பொருளாதாரக் கஷ்டத்தின் மத்தியிலும், போரைத் தொடர்வதற்கே அரசு கொடுக்குக் கட்டுகிறது.

நாட்டின் எதிர்காலப் பொருளாதாரப் பாதிப்புகள் குறித்துச் சிறிதும் அக்கறைப்படாது, யுத்தப் பிரமைக்குள் நாட்கழிக்கும் அரசின் தலைவர்கள், அடிக்கடி அரசியல் தீர்வு குறித்தும் நுனி நாக்கால் உச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமா? நாட்டின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சரிவராது, அரசியல் தீர்வே வழி என்றும் ஆசாடபூதித்தனம் போடுகிறார்கள்.

இந்த இரட்டை வேடத்தின் நோக்கம் என்ன? இராணுவ நடவடிக்கையால் தமிழர்களைப் பலவீனமாக்கிக்கொண்டு அதன்மூலம் அரசு கொடுப்பதைத் தமிழர்கள் வாங்கிக்கொள்ள நிர்ப்பந்திக்கலாம் என்ற கோட்பாட்டிலேயே அரசு வழிநடந்து செல்கிறது இந்தக் கோட்பாடே சரியானது என்று மற்றவர்களையும் நம்பவைக்கும் கூனிகளாக வலித்தும், ரஞ்சனும் முன் நிற்கிறார்கள என்பது உள்வீட்டுச் சமாச்சாரம்.

இவர்களின் இந்தக்கோட்பாட்டை பிழையாக்குவதில் தான் தமிழர்களின் எதிர்காலம் தங்கியுள்ளது. அரசாங்கம் தனது இராணுவத் தீர்வை-யுத்தத்தை-தொடர்வதனால் உண்டாகும் அழிவுகள், பாதிப்புகள் அதிகரித்தாலும், உரிமைகளை விட்டுக்கொடுப்பதில்லை, அரசியல் ரீதியாகச் சரணாகதி அடைவதில்லை என்ற உருக்குலையாத உறுதி தமிழருக்குத் தேவை.

தமிழர்களுக்கு இப்போது தேவைப்படுவது சாதாரண காலத்து மன உறுதி மட்டுமல்ல; போர்க் காலத்தே தேவைப்படும் அசாதாரண நெஞ்சுறுதி. மலையே சரிந்தாலும் மனமே குலையாதே என்ற சஞ்சலமோ, தளர்ச்சியோ, தளம்பலோ இல்லாத மலைபோன்ற உறுதி தேவை. இதுவரை காலமும் இருந்ததைவிட இனிமேல் தமிழர்களின் மனோபலம் வலிமை பெறவேண்டும். அந்த மனோவலிமை அடம்பன் கொடி போலத் திரண்டு கொள்ளுதல் அவசியம். அப்படிஒரு மனோவலிமைத் திரட்சியினால்தான் மிடுக்கினால்தான் அரசின் தவறான கோட்பாட்டை தவிடுபொடி ஆக்க முடியும்.

## கிளிநொச்சி: டீசலில் கலப்படம்

கிளிநொச்சி, அக். 28

கிளிநொச்சியில் கலப்பட டீசல்விற்பனை செய்யப்பட்டு வருவதால் உழவு யந்திரங்கள் பழுதடைகின்றன.

இங்கு விற்பனைசெய்யப்படும் டீசலில் மண்எண்ணெய் தேங்காய்எண்ணெய் போன்றவை கலக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இங்கு ஒரு லீற்றர் டீசல் 155 ரூபா ஆக விற்பனை செய்யப் படுகிறது. [இ-76]

# முல்லைத்தீவுக்கு தரைமார்க்கமாக உணவுப்பொருள் எடுத்துவர முயற்சி

மாங்குளம், அக். 28

முல்லைத்தீவுக்கு கொழும்பிலிருந்து தரை மார்க்கமாக உணவுப் பொருள்களை எடுத்து வர அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உணவு நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகவும் சீரான உணவு விநியோகம் இல்லாததால் அகதிகளும் பொது மக்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் தற்போது 8,500 அகதிகள் தங்கி உள்ளனர் இவர்கள் மாங்குளம் திருகோணமலை மற்றும் முல்லைத்தீவில் இராணுவ நடவடிக்கைகள் இடம் பெற்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள். முல்லைத்தீவு அகதிகள் புதுக்குடியிருப்பு வற்றாப்பளை அம்பலவன் பொக்கணை குமுளமுனை ஆகிய இடங்களில் உள்ள முகாம்களிலும் மற்றைய அகதிகள் முத்தையன் கட்டு, புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் விசுவமடு ஆகிய இடங்களில் உள்ள முகாம்களிலும் தங்கி உள்ளனர். (இ-94)

## விண்ணப்பம் கோரப்படுகிறது

திறந்த பல்கலைக்கழகத்தில் ''மனித வியலும் சமூக விஞ்ஞானமும்'' என்ற பீடத்துக்கு சேர விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பிராந்திய கிளை உட்பட நாட்டில் உள்ள சகல கிளைகளிலும் இந்தப் பிரிவுக்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 12 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பும்படி கோரப்பட்டுள்ளது. (இ-3)

# ஆஸ்திரேலியாவில் கூடுதல் வெளிநாட்டவர் குடியேற வசதி

கான்பெரா, அக். 28

ஆஸ்திரேலியாவில் குடியேறும் வெளிநாட்டவரின் எண்ணிக்கையை அதிகரிக்கப் போவதாக அந்த நாட்டின் பிரதமர் பொப் ஹோக் அறிவித்திருக்கிறார்.

உலகில் சுமார் 500 கோடி மக்கள் வசிக்கின்றனர்.

இவர்களில் ஆஸ்திரேலியா நாட்டில் வசிப்போரின் எண்ணிக்கை ஒரு கோடி என்பது லட்சம் மட்டுமே.

அதிக எண்ணிக்கையில் வெளிநாட்டவர்கள் குடியேற அனுமதிப்பதன் மூலம் ஆஸ்திரேலியாவில் தொழில்வாய்ப்புப் பெருகும் என்றும் பொருளாதாரச் செழிப்பு ஏற்படும் என்றும் பிரதமர் பொப் ஹோக் சொன்னார்.

அதே சமயம் இவ்வாண்டில் இரண்டு லட்சம் வெளிநாட்டவரை குடியேற அனுமதிப்பது என்று கனடா அரசு தீர்மானித்து உள்ளது.

அடுத்த ஐந்து ஆண்டு காலத்தில் அதிக வெளிநாட்டவர் கனடாவில் குடியேற அனுமதிக்கப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது (இ-எ)

# இராணுவம் முன்னேறிய பகுதிகளில் சிக்கியோர்

யாழ்ப்பாணம், அக். 28

காங்கேசன்துறை, தையிட்டி மயிலிட்டி ஆகிய பகுதிகளில் இராணுவம் முன்னேறிய இடங்களில் அகப்பட்டுக் கொண்ட பொதுமக்களின் பெயர் விபரங்கள் கிடைத்துள்ளன.

தையிட்டி - கலைமகள் வீதி கலைவாணி வீதி, சேசரி வீதி சேகரம் வீதி, முருகன் குறிச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த 22 பேரின் பெயர் விவரம் வருமாறு;

திருமதி செல்லம்மா சின்னையா, செல்வி சாந்தலட்சுமி சின்னையா, திருச்சாந்தலிங்கம், திருமதி சாந்தலிங்கம், வே. செல்லையா, திருமதி ஆச்சிப்பிள்ளை, செ. தம்பிராசா, மு. தம்பையை திருமதி பராசக்தி வேலாநந்தம் குருநாதர் சுப்பிரமணியம், திருமதி ஆறுப்பிள்ளை சிதம்பரம், திருமதி மாணிக்கம் கணபதி, திருமதி வ. வள்ளிப்பிள்ளை திருமதி இராசம்மா நன்னியர் பொன்னம்பலம், திருமதி முத்தாச்சி, க. இளையதம்பி, திருமதி இளையதம்பி, இ. சின்னத்தம்பி, திருமதி தெய்வானை, ஆ. கந்தையா

மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த சிலரின் பெயர் விவரம்:

சங்கரப்பிள்ளை முருகுப்பிள்ளை, திருமதி முருகுப்பிள்ளை, கந்தையா அருளம்பிள்ளை, ஆனந்தசேகரம் செல்லாட்சி, சின்னத்தம்பி செல்லம்மா.

தையிட்டி காங்கேசன்துறை பகுதிகளைச் சேர்ந்த சிலரின் பெயர் விவரம்;

நன்னிப்பிள்ளை பொன்னம்பலம், திருமதி பொன்னம்பலம், வீ. வல்லிபுரம், வீ. கிருஷ்ணன், வீ. கதிரிப்பிள்ளை, சுப்பிரமணியம்பிள்ளை யோசப் காசிநாதர். (இ-5)

# மண்எண்ணெய் எடுத்துவர அனுமதி பெறவேண்டும்

## தனியாருக்குக் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், அக். 28

தனியார் லொறி உரிமையாளர்கள் கொழும்பிலிருந்து மண்எண்ணெய், குடிவகைகளை எடுத்துவர கூட்டுப் படைத் தலைமையகத்திடம் அனுமதி பெற வேண்டும்.

கொழும்பில் இருந்து மண்எண்ணெய் எடுத்துவர உத்தரவு பெற்ற எரிபொருள் முகவர்களுக்குப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஏற்கனவே அனுமதி வழங்கி உள்ளது இதன் படி முகவர்கள் கொழும்பு சென்று எடுத்து வருகிறார்கள்.

ஆனால் கொழும்பு செல்லும் தனியார் லொறி உரிமையாளர்கள் கூட்டுப் படைத் தலைமையகத்திடம் அனுமதி பெற்றே மண்எண்ணெய்யையும், சாராயம் போன்ற குடிவகைகளையும் கொண்டுவர முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதே வேளை - தனியார் லொறி உரிமையாளர்கள் பட்டறி, மெழுகுதிரி, மருந்து, உரம் போன்ற பொருள்களைக் கொண்டு வரவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. [இ-3-5]

## 40 ஆயிரம் பேர் விண்ணப்பம்

கொழும்பு, அக். 28

அரச திணைக்களங்களில் நிரப்பப்படவுள்ள எழுதுவினைஞர்கள் மற்றும் தட்டச்சாளர் பதவிகளுக்குச் சுமார் 40 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இதற்கான போட்டிப் பரீட்சைகளை நடத்துவதற்காக விண்ணப்பங்கள் அனைத்தும் பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

போட்டிப் பரீட்சைகள் அடுத்தமாதம் நடத்தப்படும் என்று பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார். [இ-எ]

# தாக்குதல் தொடங்கு முன்பே விமானங்கள் வந்தது எப்படி?

(VII)

ஆகஸ்ட் 5ஆம் திகதி பின்னிரவு வேளை, கோட்டை மீது புலிகள் தாக்குதலைத் தொடர்ந்த அதே கணத்தில் குண்டுவீச்சு விமானங்கள் கோட்டையின்மீது வந்து சேர்ந்தது எப்படி?

தாக்குதல்பற்றி இரகசியத் தகவல் கிடைத்ததால் விமானங்கள் முன்கூட்டியே தயார் நிலையில் இருந்து தாக்குதல் தொடங்கியதும் வந்து சேர்ந்திருக்கலாம் என்று ஊகிக்கலாம்.

ஆனால், அப்படி எங்கள் தாக்குதல் முன்னேற்பாடுகள்

### கோட்டைப் பக்கம் நேரடிப் பார்வை

பற்றிய தகவல்கள் ''லீக்'' ஆகும் அளவுக்கு விடுதலைப் புலிகள் அமைப்பால் இராணுவ நடவடிக்கைகளைத் திட்டமிடும் பிரிவு ''வீக்'' ஆனது அல்ல.

அப்படியானால் விமானங்கள் தயார்நிலையில் காத்து நின்று வந்து சேர்ந்தது எப்படி?

புலிகள் இந்தத் தாக்குதலின்போது கோட்டையின் நான்கு புறங்களிலிருந்தும் கவச வாகனங்களில் கோட்டையை நோக்கி முன்னேறக் கூடியதாக ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த கவசவாகனங்களில் அனேகமானவை சக்கரங்களில் சங்கிலி அமைப்பைக் ['செயின் டோஸர்'] கொண்ட புல்டோஸர்களே,

விடுதலைப் புலிகளின் தொழில்நுட்பப் பிரிவினர் இந்த புல்டோஸர்களை கவச வாகனங்களாக உருமாற்றம் செய்திருந்தனர்.

கோட்டையைச் சூழவுள்ள பிரதேசத்தில்-விமானத் தாக்குதல்களினால் சேதமுற்று குண்டும் குழியுமாகக் கிடக்கும் பகுதியில் வேகமாக முன்னேற இத்தகைய 'செயின்' அமைப்புச் சக்கரங்களே வாய்ப்பானவை.

ஆனால் இந்த வாகனங்கள் வீதியில் அசையும்போது அல்லது திரும்பும் போது அதன் அதிர்வை, நீண்ட தூரத்துக்கு அப்பாலும் நிலத்தில் காதை வைத்து செவிப்புலன் மூலம் உணர்ந்து அறியக் கூடியதாக இருக்கும்.

**தகவல் கொடுக்கும் சத்தம்**

இதே போல புலிகள் கவச வாகனங்களாக உபயோகித்த பாரம் தூக்கிகளின் சக்கரங்கள் ''றப்பர் டயர்களைக்'' கொண்டவையாக இருந்தாலும் அவை நகரும் போது கிளம்பும் சத்தம் கோட்டைப் பகுதி போன்ற திறந்த வெளிகளில் நீண்ட தூரம் கேட்கக் கூடியதாக இருந்திருக்கும்

ஆகவே தாக்குதலுக்கு முன்னேற்பாடாக கவசவாகனங்களை கோட்டையைச் சூழவுள்ள பகுதிக்கு கொண்டு வந்து சேர்க்கும் போதே

- கூர்விழியான் -

வெளியில் ஏதோ ''அசமந்தம்'' நடப்பதை கோட்டைக்குள்ளே இருக்கும் சிப்பாய்கள் உய்த்துணர்ந்திருப்பார்கள். அது பற்றிய தகவல் கோட்டையிலிருந்து பலாலிக்கு பறந்திருக்கும். அதனால் குண்டு வீச்சு விமானங்கள் அழைத்தவுடன் பறந்து வரக்காத்திருந்திருக்கும்.

இதேவேளை-

இந்தத் தாக்குதலுக்கு புலிகள் தமக்கு சாதகமாகக் கருதிய மற்றைய அம்சம் ஒன்றும் அவர்கள் எண்ணியதை விட வேறாக அமைந்திருக்க வேண்டும்.

தாக்குதல் நடத்துவதற்கு நிலவு நேரத்தைத் தேர்ந்தெடுத்தமையே அந்த எதிர்பாராத விளைவை ஏற்படுத்திய அம்சம்.

நிலவுகாலத்தை புலிகள் ஏன் தமக்குச் சாதகமாகத் தேர்ந்தெடுத்தார்கள்? அது எதிர்பார்த்திற்கும் பாதகமானது எப்படி?

[தொடரும்]

## யாழ். வாசி மாங்குளத்தில் சூடுபட்டு காயம்

யாழ்ப்பாணம், அக். 28

மாங்குளம் இராணுவத்தினரின் சூட்டுக்கு இலக்காகி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார்.

இராஜகோபால் (56 வயது) என்பவரே காயமடைந்தார் வவுனியாவுக்கு பொருள்களை வாங்கச் சைக்கிளில் சென்ற அவர் பாதை மாறி இராணுவ முகாம் 'சென்றி'க்குச் சமீபமாகப் போய்விட்டார்.

அப்போதே அவர் சூட்டுக்கு இலக்கானார். (ஒ-3-5)

## 10 ஆயிரம் ஜே.வி.பி.யினர் தடுத்து வைப்பு

கொழும்பு, அக். 28

நாட்டின் தென் பகுதியில் உள்ள பல தடுப்பு முகாம்களில் பத்தாயிரத்துக்கும் அதிகமான ஜே.வி.பி. இயக்கத் தீவிரவாத சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இத்தகவலை பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். [ஒ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள் கடன்

கொழும்பு, அக் 28

அரச சேவையில் உள்ள நிரந்தர மற்றும் தற்காலிக ஊழியர்கள் சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள்களை வாங்குவதற்கான சலுகைத் திட்டம் ஒன்றை பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபை தயாரித்துள்ளது.

உத்தியோக அலுவல்களுக்கு மோட்டார் சைக்கிள் பாவிக்க வேண்டிய நிலையில் உள்ள அரச ஊழியர்களே இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க முடியும்.

நிரந்தர ஊழியரின் சம்பளம் வருடாந்தம் 22 ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேலாக இருக்கவேண்டும் என்றும் —

பத்து வருட சேவை ஆற்றி ஓய்வூதியம் பெறும் அரச ஊழியர் ஒருவர் பிணைப்பத்திரம் வழங்க வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

# நாடாளுமன்றை கலைக்கும் யோசனையை ஏற்காதீர்கள்

## சந்திரசேகர் விண்ணப்பம்

நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு புதியபொதுத் தேர்தலை நடத்தும்படி பிரதமர் வி. பி. சிங் ஆலோசனை தெரிவித்தால், அதனை ஏற்கவேண்டாம்.

இப்படி ஜனதா தள் தலைவர்களில் ஒருவரான திரு எஸ் சந்திரசேகர் ஜனாதிபதி வெங்கடராமனிடம் விண்ணப்பித்திருக்கிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்து 30 நிமிடங்கள் நடத்திய பேச்சுக்களின் போது, திரு சந்திரசேகர் இவ்வேண்டுகோளை விடுத்தார் என பி. பி. சி அறிவித்தது.

ஜனதா தள் கட்சியின் ஒரு பிரிவினரின் துணையுடன் இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து பிரதமராக வரும் முயற்சியில் திரு. சந்திரசேகர் இறங்கி இருக்கிறார் என்றும் —

இதன் ஒரு கட்டமாகவே திருமதி மேனகா காந்தியின் ராஜினாமா அமைந்திருப்பதாகவும் பி. பி. சி மேலும் அறிவித்தது. (இ-எ)

# லோகசபையைக் கலைக்க சிபார்சு செய்ய மாட்டேன்!

## பிரதமர் வி. பி. சிங் அறிவிப்பு

லோகசபையைக் கலைத்து புதிய தேர்தலை நடத்தும்படி ஜனாதிபதிக்குச்சிபார்சு செய்யப்போவதில்லை என்று பிரதமர் வி. பி. சிங் நேற்று அறிவித்தார்.

நம்பிக்கை கோரும் பிரேரணை தோல்வியுற்றால், ஜனதா தள் கட்சி எதிர்க்கட்சி வரிசையில் அமரும் என்றும் திரு சிங் தெரிவித்தார்.

பாரதீய ஜனதா கட்சியும் இந்திராகாங்கிரஸ் கட்சியும் சேர்ந்தே மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்கும் நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளதாகவும் பிரதமர் சிங் தெரிவித்தார். (உ-எ)

## ராமர் ஆலய விவகாரம்:

# உத்தரப் பிரதேசத்தில் 60 ஆயிரம் பேர் கைது!

அயோத்தியில் ராமர் ஆலயம் கட்டுவது தொடர்பாக, சுமார் 60 ஆயிரம் பேர் உத்தரப்பிரதேச மாநிலத்தில் இதுவரை கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

இதேவேளை —

ராமர் ஆலயம் கட்டும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளப் போவதாக அறிவித்த இந்திரா காங்கிரஸ் எம் பி ஒருவர், கட்சியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டார். (உ-எ)

# மரண அறிவித்தல்

## திருமதி சோமநாதன் திரவியம்

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சோமநாதன் திரவியம் காலமானார். அன்னார் சோமநாதனின் அன்பு மனைவியும், சிவகுமாரன் [பிரான்ஸ்] விஜயகுமாரன் [ஏசியன் ஓயில் மில் கொடிகாமம்], சிறீஸ்கந்தகுமாரன் [லண்டன்] நாமகள் [கனடா], திருமகள் ஆகியோரின் அன்புத் தாயாரும், புவனேஸ்வரி, விமலா [ காதியம். போதனா வைத்தியசாலை ] சுலோஜனா [லண்டன்], ஆனந்தராஜா [கனடா], தெய்வேந்திரராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்சினி பிரசாந்தி, சிவாஜினி, பிரபஞ்சனா, பிரதாப், மணிமாறன் [லண்டன்], நிர்த்திகா [லண்டன்], நிசாந்தி [கனடா], திவ்வியா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28-10-90 இன்று காலை 10.00 மணியளவில கொடிகாமம் கட்டைபறிச்சான் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

சோ. விஜயகுமாரன்

கொடிகாமம். [T4268]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28 - 10 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றும் கடும் மழை?

சென்னை, அக் 28

வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள காற்றுஅமுக்கத்தால் அடுத்து வரும் 48 மணிநேரத்தில் தென் இந்தியாவிலும் இலங்கையின் வடபகுதியிலும் பலத்த மழை பெய்யக்கூடும் என சென்னையில் வானிலை அவதான நிலையம் தெரிவித்தது. (ஒ-5)

## யாழ் நகரப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மடைந்தனர்.

அஞ்சலோஸ் செல்வராஜா (வயது 39), அவரின் மாமியாரான திருமதி பீஸ் ஜோசப் (வயது 60) ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

இவர்கள் இருவரும் உடனடியாக செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவின் வாகனம் மூலம் மானிப்பாயில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலால் மூன்று வீடுகள் பலத்த சேதமடைந்தன.

பொம்மர் தாக்குதல் நடந்தபோது வீடுகளிலேயே எல்லோரும் இருந்தபோதிலும் ஏனையோர் மயிரிழையில் உயிர் தப்பினர்.

பொம்மர் தாக்குதலைத் தொடர்ந்து பெரும் மழை பெய்ய ஆரம்பித்ததால் சேதமடைந்த வீட்டு உரிமையாளர்கள் வெள்ளத்தில் சிக்கிய தமது உடைமைகளை பெரும் சிரமத்தின் மத்தியில் அப்புறப்படுத்தியதைக் காண முடிந்தது. (இ 15-6-51)

## 11 எதிர்க்கட்சி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய இடங்களில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களின் சடலங்கள் இராணுவ முகாம்களுக்கு அருகில் காணப்பட்டன.

அரசுக்கு எதிரானவர்கள் கூட்டிச் செல்லப்பட்டு, விசாரணை இன்றிக் கொல்லப்பட்டு, அவர்களின் சடலங்கள் தூரஇடங்களில் போடப்படும் அல்லது எரிக்கப்படும் சம்பவங்கள் தென்மாகாணத்தில் பரவலாக நடந்துள்ளன. அதேபோல கொலைப் பயமுறுத்தல்களும் இடம்பெற்றிருக்கின்றன—

எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஐந்து எம். பிக்கள் தமக்குக் கொலைப் பயமுறுத்தல் கிடைத்திருப்பதாக சர்வதேச நாடாளுமன்ற சங்கத்தில் முறையிட்டனர். அதேபோல மற்றொரு எதிர்க்கட்சி எம். பி, தமக்கும் மற்றும் வேறு ஐந்து எம். பிக்களுக்கும் கொலைப் பயமுறுத்தல கடிதங்கள் கிடைத்ததாக முறையிட்டார் — என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ]

## 2 ஆம் ஆண்டு இதய அஞ்சலி

அமரர்
கிருஷ்ணன் சதீஸ்வரன்

தாயின் மடியில்:
29 — 01 — 1969

ஆண்டவன் அடியில்:
28 — 10 — 1988

அரக்கர் அழிப்பால்
மறைந்த எம் உயிரே
ஆண்டிரண்டு
போனாலும்
ஆசைமுகம்
மறப்போமோ?

உமது பிரிவால் வாடும்:

அம்மா, அப்பா,
சகோதரர், அத்தான்
மார், அண்ணிமார்,
உற்றார், உறவினர்,
சுன்னாகம் தொழிற்
சாலை நண்பர்கள்.

செய்திச் சாரம்

## சாந்திகம் புதிய செம்மணி வீதியில்

யாழ்ப்பாணம், அக் 28

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெருவில் இயங்கி வந்த சாந்திகம் எதிர்வரும் முதலாம் திகதி முதல் புதிய செம்மணி வீதி தபால் வ கந்தோருக்கு அருகாமையில் தற்காலிகமாக இயங்க உள்ளது.

மனநிலை பாதிக்கப்பட்டோருக்கு ஆலோசனைமூலம் சிகிச்சை வழங்கும் பிரஸ்தாப நிலையக் கட்டடம் சமீபத்திய விமானத் தாக்குதலில் தரைமட்டமானது தெரிந்ததே. (இ-15)

## நியூசிலாந்தில் ஆளும் கட்சி தோல்வி

வெலிங்டன், அக். 28

கடந்த வெள்ளி நடந்த நியூசிலாந்து நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் ஆளும் தொழிற்கட்சி தோல்வி அடைந்தது.

97 ஆசனங்களைக்கொண்ட நாடாளுமன்றத்தில் 69 ஆசனங்களை தேசியக் கட்சி கைப்பற்றி ஆட்சியைப் பிடித்தது.

தொழிற்கட்சி கடந்த ஆறு ஆண்டுகளாகப் பதவியில் இருந்தது. [ஒ-எ]

## பன்னாலை சங்கக் கடையில் திருட்டு

யாழ்ப்பாணம், அக். 28

பன்னாலையில் உள்ள தெல்லிப்பழை ப. நோ. கூ. ச. கிளை நேற்று முன்தினம் இரவு உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

நிவாரணம் வழங்குவதற்காக அங்கு வைக்கப்பட்டிருந்த உணவுப்பொருள்களும் அபகரிக்கப்பட்டு விட்டன.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தின் 12 ஆம், 13 ஆம், 19 ஆம், 34 ஆம் இலக்கக் கிளைகள் ஏற்கனவே உடைக்கப்பட்டு திருட்டுப் போய் உள்ளது குறிப்பிடத்தக்கது. [ஒ-5-3]

## ஜப்பான் ரூ.30கோடி உதவி

கொழும்பு, அக். 28

வளைகுடா நெருக்கடியால ஏற்பட்டுள்ளபொருளாதாரச் சுமைகளை சமாளிக்க இலங்கை அரசுக்கு ஜப்பான் 30 கோடி ரூபாவையும்-

வளைகுடாவில் இருந்து இலங்கையரைத் தாயகம் திரும்ப உதவுமுகமாக ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் 60 கோடி ரூபாவையும் அளித்து உதவ முன் வந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

## கிளிநொச்சி சமநல சேவை அலுவலகம்

கிளிநொச்சி, அக் 28

கிளிநொச்சி மாவட்ட சமநல சேவை உதவி ஆணையாளர் அலுவலகம் தற்பொழுது உருத்திரபுரம் சமநல சேவை நிலையக் கட்டடத்தில் இயங்குகின்றது.

உதவி ஆணையாளர் அலுவலக சகல தர ஊழியர்களையும் நாளை திங்கட்கிழமை உருத்திரபுரத்தில் கடமைக்குச் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஒ)

## இளைஞர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், அக். 28

கடந்த 17 ஆம் திகதி வவுனியாவில் படையினரால் கைது செய்யப்பட்ட வவுனியா கந்தசாமி கோயிலடியைச் சேர்ந்த செல்வநாயகம் ஹெமிட்டன் [வயது 16] என்ற இளைஞர் படையினரால சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிய வருகிறது. [உ]

## இறைவரி ஊழியர்

யாழ்ப்பாணம், அக் 28

யாழ்ப்பாணம் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஊழியர்கள் அனைவரும் நாளை திங்கட்கிழமை காலை அலுவலகத்துக்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். சிரேஷ்ட வரிமதிப்பாளர் திரு இ. கார்த்திகேசு இது சம்பந்தமாக அறிவித்துள்ளார். (அ)

# அத்தியாவசிய சேவை தடங்கல் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், அக். 28

யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்களுக்குரிய அத்தியாவசிய சேவைகளைச் சரிவரச் செய்வதில் உள்ள தடங்கல்கள் குறித்து நேற்று ஆராயப்பட்டது.

சம்பந்தப்பட்ட அரசாங்க திணைக்கள கூட்டுத்தாபன உயர் அதிகாரிகளும் மற்றும் வங்கிகள், ஆஸ்பத்திரி, தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இது சம்பந்தமான கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திணைக்கள உயர் அதிகாரிகள் தத்தமது பகுதிப் பிரச்சினைகளை எடுத்துரைத்தனர்.

அரசாங்க அதிபர் தலைமையில் நடந்த பிரஸ்தாப கூட்டத்தில் கலந்துகொண்ட செஞ்சிலுவைச் சங்க சர்வதேசப் பிரதிநிதிகள், தடங்கல்கள் குறித்துக் கேட்டறிந்து, அவற்றை நீக்குவதற்குத் தம்மால் செய்யக்கூடிய உதவிகளைப்பற்றித் தெரிவித்தனர். [அ-6]

## வயோதிப...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இறக்கி விட்டனர்.

அந்த ஏழுபேரும் மார்பளவு ஆழத்தில் இறங்கி ஒருவரோடு ஒருவர் கையை பிணைத்தபடி பெரும் கஷ்டத்தின் மத்தியில் கரையை அடைந்தனர்.

அந்தப்படகில் வந்த படகோட்டி உட்பட ஏனைய மூன்று இளைஞர்களுக்கும் என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை.

படகையும், அதில் இருந்த பொருள்களையும் கடற்படையினர் எடுத்துச் சென்றுவிட்டனர்

இந்தத் தகவல்களை படகில் இருந்து மீண்டு வந்த முகமாலையைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-117)

## நேற்று தகனம்

வலி- வடக்கில் இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த போராளி மகானின் (சுதாகர் இராஜதுரை - கோப்பாய்) புகழுடம்பு நேற்று கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (ஒ-72)

## குவைத் தமிழர் தமிழ் நாட்டில் தஞ்சம்

குவைத்தில் இருந்து வெளியேறிய இலங்கைத் தமிழர் சிலர், தமிழ்நாட்டில் உள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருக்கின்றனர் என அறியவருகிறது. (ஒ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org